# தமிழ்

## (model question paper and answer 1 to 10)

## 2 marks

1) விடைக்கேற்ற வினா அமைக்க.

| | |
|---|
| 1) அரசன் அறநெறியில் ஆட்சி செய்ய வேண்டும். அறநெறியில் ஆட்சி செய்ய வேண்டியவன் யார்? |
| 2)நன்றும் தீதும், ஆய்தலும் அன்பும், அறனும் காத்தலும் அமைச்சர் கடமை. அமைச்சர் கடமை யாவை? |
| 3)வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. எதனை சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன? |
| 4) நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல். அதிசயத் திறவுகோல் எது? |
| 5)தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை எது? |
| 6)விருந்து பற்றி எடுத்துரைக்கும் சங்க இலக்கியங்கள் யாவை? காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது? |
| 7)"இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன் என்று பாரதியார் பாடினார். 'இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்து |

| |
|---|
| விட்டேன்' என்று பாடியவர் யார்? |
| 8)தமிழ்க் கல்வெட்டு காணப்படும் பிறநாடு சீனா<br>தமிழ்க் கல்வெட்டு காணப்படும் பிற நாடு எது? |
| 9)கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் தருவது நிகழ்கலை<br>நிகழ்கலை என்றால் என்ன? |
| 10)நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் என்றவர் ந. முத்துசாமி<br>நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் என்றவர் யார்? |
| 11)பேரரசனது மெய்ப் புகழை எடுத்துக் கூறுவது மெய்க்கீர்த்தி.<br>மெய்கீர்த்தி என்பது யாது? |
| 12)முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில் தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது.<br>_யாருடைய காலத்தில் தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது? |
| 13)பேரரசனது மெய்ப் புகழை எடுத்துக் கூறுவது மெய்க்கீர்த்தி.<br>மெய்கீர்த்தி என்பது யாது? |
| 14)சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தி யோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை.<br>எந்த மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தி யோடு சாசனங்களை பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை. |

| |
|---|
| 15)செல்வத்தின் பயனே ஈதல் என்கிறது புறநானூறு.<br>செல்வத்தின் பயன் குறித்து புறநானூறு கூறுவது யாது? |
| 16)நோக்கம் இன்றி அறம் செய்வதே மேன்மை.<br>எது இன்றி அறம் செய்வதே மேன்மை? |
| 17)தமிழ்நாட்டில் சிறு கூலங்கள் அதிகமாக உள்ளன.!<br>எங்கள் சிறு கூலங்கள் அதிகமாக உள்ளன? |
| 18)தமிழ்மொழி விண்ணோடும் முகிலோடும் ஒப்பிடப்படுகிறது.<br>தமிழ்மொழி எவற்றோடு ஒப்பிடப் படுகிறது? |

---

**2)**ஒருவற்கு பெருமை தருவது எது?

1)ஒரு செயலை முடிப்பதற்கு இயலாது என்று எண்ணிச் சோர்வடையக் கூடாது.

2)அச்செயலை பெருமை தரும்.முயற்சியுடன் முடிப்பது.

---

**3).** பாசவர், வாசவர், பல்நிண உமணர் சிலப்பதிகாரம் விலைஞர் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

★பாசவர் -வெற்றிலை விற்பவர்கள்

★வாசவர்- நறுமணப் பொருட்களை

★விற்பவர்கள்

★பல்நிண விலைஞர் - பல்வகை இறைச்சிகளை

★விலைகூறி விற்பவர்கள்

★உமணர்-உப்பு விற்பவர்

**4). தானியங்களுக்கு வழங்கப்படும் சொற்கள் யாவை?**

- ➔ விதை
- ➔ கூலம்
- ➔ பயறு
- ➔ காழ்
- ➔ தேங்காய்
- ➔ முத்து
- ➔ கொட்டை
- ➔ கடலை
- ➔ முதிரை

**5)'வேர்டுஸ்மித்' - குறிப்பு வரைக.**

- ➔ இதழியல் மொழி நடையை உருவாக்கும் மென்பொருளின் பெயர் வேர்டுஸ்மித். இதற்கு எழுத்தாளி என்று பெயர்.
- ➔ இதில் தகவல்களைக் கொடுத்தால் போதும். சில நொடிகளிலேயே அழகான கட்டுரை களை உருவாக்குகின்றன.

**6)'குற்றம்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.**

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

7)'உறங்குகின்ற கும்பகர்ண எழுந்திராய்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



எழுந்திராய், காலதூதர் கையில் உறங்குவாய் உறங்குவாய்'

கும்பகர்ணனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

விடை :

- 'கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்கத் தொடங்கிவிட்டது. அதனைக் காண்பதற்கு எழுந்திடுவாய்' என்று சொல்லி எழுப்பினார்கள்
- வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையிலே படுத்து உறங்கச் சொல்கிறார்கள்.

---

8).வசன கவிதை - குறிப்பு வரைக.

விடை :

வசன கவிதை :

உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும்.

சான்று :

இவ் வுலகம் இனியது, இதிலுள்ள வான் இனிமை யுடையது காற்றும் இனிது.

-பாரதியார்.

---

9) முகமன் வழங்கல் எனும் சொல் எவற்றை உணர்த்துகின்றது?

முகமன் வழங்கல் என்ற சொல் ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொல்லாகும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**10)அமில மழை எவ்வாறு உருவாகிறது?**

காற்றில் கலந்து விடும் கந்தக டை ஆக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு ஆகியவை மழை பெய்யும்போது நீரில் கரைந்து அமில மழையாகப் பெய்கிறது.

**11)செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.**

- ➔இயந்திர மனிதன் (Robo - ரோபோ)
- ➔திறன் பேசி (Smart Phone).

**12)'எப்பொருள்'எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.**

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.'

13) 'நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் - மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' -
இது போன்ற உலகக் காற்று விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

விடை :

- ➔மரங்களை வளர்த்திடுக! காற்றெனும்
- ➔வரப்பிரசாதம் பெற்றிடு!
- ➔காற்று மாசை ஒழித்திடுவோம்!
- ➔தூய காற்றை சுவாசித்திடுவோம்!

www.Padasalai.Net

➔ நோயற்ற வாழ்வு வாழ்ந்திடுவோம்!

---

**14)"காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" யாது? உவமை உணர்த்தும் கருத்து**

விடை :

இளம் பயிரானது வளர்ந்து நெல் மணிகளைக் காணும் முன்பே, தூய மணி போன்று மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்து விட்டதைப் போல, கருணையனாகிய நானும் என் தாயை இழந்து வாடுகின்றேன்.

---

**15)அன்னை மொழிப் பாடலை அழகாக்கும் நூல்கள் யாவை?**

விடை :

- ➔ திருக்குறள்
- ➔ பத்துப்பாட்டு
- ➔ எட்டுத்தொகை
- ➔ பதினெண்கீழ்க்கணக்கு
- ➔ சிலப்பதிகாரம்
- ➔ மணிமேகலை.

---

**16)குறிப்பு வரைக - அவையம்.**

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்கு துணை புரிந்தன.

➔ அறம் கூறும் அவையம் பற்றி 'அறம் அறக் கண்ட நெறியமான் நெறியமான் அவையம்' அவையம்' என்று புறநானூறு கூறுகிறது.



www.Padasalai.Net

→ உறையூரிலிருந்த அற அவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

→ மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்று கூறுகிறது.

---

**17)**அருமை" எனத் தொடங்கும் திருக்குறள் எழுதுக.

விடை :

'அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்.''

---

**18)**காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது**?**

→ காலக் கழுதை கட்டெறும்பானது என்பது காலம் மாறி வயது முதிர்தலைக் குறிப்பது ஆகும்.

→ வயது முதிர்ந்து உடலும் உடல் உறுப்புகளும் வலுவிழந்தாலும் அறப்பணியைத் தொடர்ந்து செய்கிறார்.

→ வாளித் தண்ணீர், சாயக்குவளை, துணி கந்தையானாலும், சாயம் அடிக்கும் தூரிகை கட்டையானாலும் சுத்தம் செய்வது போல, காலக்கழுதை கட்டெறும்பான பின்னும் அறப்பணி ஓயாது தொடர்கிறது.

---

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**18. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை விளக்குக?**

கூரான ஆயுதம் : உழைத்ததால் கிடைத்த ஊதியம்.

காரணம் : இதுவே அவனுடைய பகைவனை வெல்லும் கூரான ஆயுதம்.

---

**19)வாழ்வின் தலைக்கணம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?**

நாள்தோறும் சுமக்கும் தலைச்சுமைதான் "தலைக்கனமே வாழ்வு'' என்ற சித்தாளின் வாழ்வைக் குறித்து நாகூர் ரூமி கூறுகிறார்.

---

**20)அறத்தின் குறியீடாக போற்றப்பட்டவை எவை?**

மன்னர்களுடைய செங்கோலும், வெண் கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன.

---

**21. 'பல்லார்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.**

"பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்."

---

**22)அறத்தையும் இன்பத்தையும் தருவது எது?**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

முறையறிந்து தீமையற்ற வழியில் சேர்த்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் தரும், இன்பத்தையும் தரும்.

---

**23) ஏழு இசைகளைக் குறிப்பிடுக.**

★குரல்
★கைக்கிளை
★துத்தம்
★உழை
★விளரி
★ கிளி
★தாரம் ஆகியவனவாகும்.

---

**24)வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு கண்டுபிடிப்புகளைக் கூறுக.**

→இயந்திர மனிதன் (Robo - ரோபோ)
→திறன் பேசி (Smart Phone)

---

**25)வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.**

→நூல் வாங்குவதற்கு போதிய பணமில்லாத வறுமை நிலையிலும் பழைய புத்தகங்கள் விற்கும் கடைக்குச் செல்வார்.
→விருப்பமான புத்தகங்களை மிகக் குறைந்த விலைக்கு வாங்கும் வாடிக்கைக் கொண்டிருந்தார்.

- ➔ உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு பட்டினி கிடந்திருக்கிறார்.
- ➔ செவிவழியாகவும் இலக்கிய அறிவைப் பெற்றிருக்கிறார்.

இவையே ம.பொ.சி. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் என்பதற்குச்.

---

**26)'முயற்சி' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.**

விடை :

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

---

**27) அண்டப்பகுதி குறித்து மாணிக்கவாசகர் குறிப்பிடும் செய்தி யாது?**

- ★ அண்டப் பகுதியின் உருண்டை வடிவம் ஒப்பற்ற வளமான காட்சியும் ஒன்றுடன் ஒன்று ஈர்ப்புடன் நூறு கோடிக்குமேல் விரிந்து நின்றன.
- ★ கதிரவனின் ஒளிக்கற்றையில் தெரியும் தூசுத்துகள் போல அவை நுண்மையாக இருக்கின்றன.

---

**28)இரண்டாம் இராசராசனின் பட்டங்கள் யாவை?**

- ★ கோப்பரகேசரி
- ★ திரிபுவனச் சக்கரவர்த்தி

ஆகியவையாகும்.

www.Padasalai.Net

**29) மொழிப் பெயர்ப்பு முயற்சியை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை?**

★ சாகித்திய அகாதெமி.
★ தேசிய புத்தக நிறுவனம்.

**30)இலா என்னும் மென்பொருள் குறித்து விளக்குக.**

★ பாரத ஸ்டேட் வங்கி 'இலா' என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கி யுள்ளது.
★ ஒரு வினாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கை யாளர்களுடன் உரையாடும்.
★ அவர்களுக்கான சேவையை இணையம் மூலம் அளிக்கிறது.

**31)'இன்மையின்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.**

விடை :

இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

**32)தினைச் சோற்று விருந்து - விளக்குக.**

★ கூத்தர், பாணர், விறலியர் போன்ற கலைஞர்கள் தம் கலைத்திறன்களை நிகழ்த்திக் காட்டி மக்களை மகிழ்விப்பர்.
★ மன்னர்களும், வள்ளல்களும் விருந்தோம்பிப் பரிசளித்துப் போற்றுவர்.

www.Padasalai.Net

★அவ்வகையாக விருந்தோம்பிய தன்மையைக் காட்சிப்படுத்துகிறது தினைச்சோற்று விருந்து.

---

**33)பிள்ளைத்தமிழில் குமரகுருபரர் குறிப்பிடும் அணிகலன்கள் யாவை?**

| அணிகலன்கள் | அறியப்படும் இடம் |
|---|---|
| சிலம்பு, கிண்கிணி<br>சுட்டி<br>அரைநாண்<br><br>குண்டலம், குழை<br>சூழி | கால்<br>நெற்றி<br>இடையில் அணியப்படும் (இடுப்பு)<br>காது<br>தலை |

---

**34)உதவியாண்மை -விளக்குக.**

விடை :

உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் 'உதவியாண்மை' என்ற சொல்லால் குறிப்பிடு கின்றார்.

---

**35)ஜெயகாந்தனின்புதினங்கள் குறும் சிலவற்றைக் கூறுக.**

கை விலங்கு

ரிஷிமூலம்

கருணையினால் அல்ல

சினிமாவுக்குப் போன சித்தாளு

www.Padasalai.Net

---

**36)**அருமை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

"அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."

---

**37)** தமிழர் பண்பாட்டின் மணிமகுடம் எது?

விடை :

★ வேளாண்மை செழிக்கவும், மானுடம் தழைக்கவும் சித்திரைத் திங்களில் நடத்தப்படும் பண்பாட்டு நிகழ்வு பொன் ஏர் பூட்டுதல் ஆகும்.

★ இந்நிகழ்வு தமிழர் பண்பாட்டின் மணிமகுடம் ஆகும்.

---

**38)"**காய்மணி யாடு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" - உவமை உணர்த்தும் பொருள் யாது?

விடை:

இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காண்பதற்கு முன்பே வாடிக் காய்ந்து விட்டதைப் போல, கருணையனின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்த தன் தாயை இழந்து வாடுகிறார் கருணையன்.

---

**39)** ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.

ஒருசீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

ஒரு சீப்பில் பல வாழைப் பழங்கள் உள்ளன.

மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச்

www.Padasalai.Net

சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

விடை :

சரியான தொடர்கள் :

.ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.

ஒரு சீப்பில் பல வாழைப் பழங்கள் உள்ளன.

பிழையான தொடர் :

ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள்

பிழைக்கான காரணம் :

தாறு - வாழைக்குலை; சீப்பு - வாழைத்தாற்றின் பகுதி.

வாழைத்தாற்றில் பல சீப்புகள் உள்ளன என்றே கூற வேண்டும்.

---

**40)"**. காற்றின் ஆற்றல் குறித்து ஐயூர் முடவனார் மற்றும் மதுரை இளநாகனார் குறிப்பிடுவது யாது?

விடை :

வளி மிகின் வலி இல்லை - ஐயூர் முடவனார்

கடுங்காற்று மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது - இளநாகனார்

---

**41)**'செயற்கை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

விடை :

“செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத் தியற்கை அறிந்து செயல்.

---

**42). பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.**

தம்பி அழாதே! அப்பாவும் அம்மாவும் விரைவில் வந்து விடுவார்கள். வரும்போது உனக்கு விளையாட்டுப்
பொருட்களை வாங்கிக் கொண்டு வருவார்கள்

---

**43)உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.**

விடை :

★ நிலம்
★ ஆகாயம்
★ நீர்
★ நெருப்பு
★ காற்று

---

**44)வாளையும் யாழையும் பணையம் வைத்து விருந்தளிக்கப்பட்ட செய்தியைக் கூறுக.**

விடை :

பழைய வாள் :

நேற்று வந்த விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன்.

சீறியாழ் :

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

இன்றும் விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான்.

---

**45)**ஞானப்பிரகாசம் என்ற இயற்பெயர் பெற்ற தமிழறிஞர் யார்? அவரின் பெற்றோர் யாவர்?

விடை :

★ ஞானப்பிரகாசம் என்ற இயற்பெயர் பெற்றவர் ம.பொ.சிவஞானம்

★ அவரின் பெற்றோர் : பொன்னுசாமி சிவகாமி.

---

**46)**'அறிவு' என முடியும் திருக்குறளை எழுதுக.

விடை :

எப்பொருள் எத்தன்மை தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு.

---

**47)**மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் அறுத்துச் கத்தியால் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார்.

---

**48)**சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கிற ஒல்லித் தண்டுகளாகக் குறிப்பிடப்படுவோர் பெண்கள்.

இவர்கள் அமைதியான முறையில் இவ்வுலகத்தைத் தாங்கி நிறுத்த போராடும் போராளிகள்.

---

**49)**'விடும்' என முடியும் திருக்குறளை எழுதுக.

விடை :

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்."

---

www.Padasalai.Net

## பிரிவு- 2( 2 marks)

**1)**தனிச் சொற்றொடர்களாக மாற்றுக. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது.

answer:

ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அதனால் அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.

---

**2).** எழுவாயைச் செம்மை செய்க.

அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

ஆ) குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

விடை :

அ) பயன்தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

ஆ) படைப்புத்திறன் மிக்க குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

---

**3).** கலைச்சொல் அறிக.

1) Belief- நம்பிக்கை

2) Tornado - சூறாவளி.

3)Symbolism - குறியீட்டியல்.

4) Humanism - மனிதநேயம்.

5)Artifacts - கலைப் படைப்புகள்

6)myth - தொன்மம்.

7)Discussion -கலந்துரையாடல்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

8)Epic Literature - காப்பிய இலக்கியம்
9)Modern Literature -நவீன இலக்கியம்
10)Conversation -உரையாடல்
11)Emblem -சின்னம்
12)Document-ஆவணம்
13)Terminology - கலைச்சொல்
14)Patent -காப்புரிமை
15)Thesis - ஆய்வேடு
16)Guild - வணிகக்குழு
17)Vowel - உயிரெழுத்து
18)Storm - புயல்
19)Cultural -பண்பாட்டு விழுமியங்கள்
20)Sea Breeze - கடற்காற்று

---

**4)**தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.

அ) வரப்போகிறேன்
ஆ) கொஞ்சம் அதிகம்
விடை :
பொருத்தமான தொடர் :

**1)**வரப்போகிறேன்: என் நண்பன் இன்னும் சிறிது நேரத்தில் வரப்போகிறேன் என்றான்.

**2)**கொஞ்சம் அதிகம் : சங்க காலத்தில் மன்னர்களுக்கு கொடையும் வீரமும் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது.

---

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**5)** வஞ்சிப்பாவிற்குரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை களிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.

விடை :

வஞ்சிப்பா தூங்கல் ஓசையையும், கலிப்பா துள்ளல் ஓசையையும் பெற்று வரும்.

---

**6)வேங்கை என்பதைத் தொடர் மொழியாகவும், பொது மொழியாகவும் வேறுபடுத்திக்காட்டுக?**

வேங்கை : வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும். (தனிமொழி)

வேம் + கை : வேகின்ற கை எனவும் பொருள் தருகிறது. (தொடர் மொழி).

---

**7)உரைத்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

உரைத்த = உரை + த் + த் + அ

உரை -பகுதி

த் - சந்தி

த் -இறந்தகால இடைநிலை

அ -பெயரெச்ச விகுதி.

---

**9)**தொடரைச் சொற்றொடராக மாற்றுக. இன்னாசிரியர் புத்தகங்களை வரிசைப் படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங் களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களை கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

விடை

இன்னாசிரியர் புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்குகளில் அடுக்கி, புத்தகங்களை கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

---

**10).** மரபுத் தொடர்களை பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

அ) அள்ளி இறைத்தல்

ஆ) முதலைக் கண்ணீர்

இ)கண்ணும் கருத்தும்

விடை :

அ) அள்ளி இறைத்தல் :

பணத்தைக் கணக்குப் பார்க்காமல் அள்ளி இறைத்தால் விரைவில் வறுமை நிலையை அடைவாய்.

ஆ) முதலைக் கண்ணீர் :

குளங்களை மேடாக்கி வீட்டுமனை விற்போர் தண்ணீர் கிடைக்காமல் வருந்தும் மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

இ)கண்ணும் கருத்தும் :

கண்ணும் கருத்துமாய் கவனமுடன் படித்தால் முதல் மதிப்பெண் பெறலாம்.

---

11) சொற்களைப் பிரித்துப் பார்த்து பொருள் தருக.

பிண்ணாக்கு, பலகை விடை :

**1)**பிண்ணாக்கு :

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

பிண்ணாக்கு - எள், கடலை சேர்த்து ஆட்டும்
போது கிடைப்பது.
பிள்நாக்கு - பிளவுபட்ட நாக்கு
2)பலகை :
பல கை
பல கை -மரப்பலகையைக் குறிக்கும்.
பலகை -பல கைகளைக் குறிக்கும்.
3)கானடை:
கான் + அடை = காட்டேச் சேர்
கான் + நடை = காட்டுக்கு நடத்தல்
கால் + நடை = காலால் நடத்தல்

---

12)வண்ணமிட்ட வகைப்படுத்துக.
தொகைச் சொற்களை
வெண்டைக்காய் பொரியல் மோர் குழம்புக்கு
பொருத்தாக இருக்கும்.
விடை :
1)வெண்டைக்காய் - இரு பெயரொட்டுப்
பண்புத் தொகை.
2)மோர்க் குழம்பு -மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

---

13)பொதுமொழி என்றால் என்ன? சான்று தருக.
விடை :
பொதுமொழி :

www.Padasalai.Net

★ ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தருவது பொதுமொழி ஆகும்.

★ தனிமொழிக்கும் பொதுவாய் அமையும். தொடர்மொழிக்கும்

எ.கா.: எட்டு - எண்ணைக் குறிக்கும்

எள் + து - எள்ளை உண்.

---

**<u>14) மயங்கிய - பகுபத உறுப்பிலக்கணம் தருக.</u>**

<u>விடை :</u>

மயங்கிய = மயங்கு +இன்(ன்) + ய் + அ

மயங்கு = பகுதி

இன் - இறந்தகால இடைநிலை

ய் - உடம்படுமெய் சந்தி

அ - பெயரெச்ச விகுதி.

---

15) இரு சொற்களை இணைத்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

மலை -மாலை, விடு -வீடு

**1)**மலை -மாலை

மலை மீது ஏறி மாலையில் விளையாடினேன்.

**2)**விடு - வீடு

தன்னைத் தாக்க வந்தவனை விடு விடு என்று தடுத்துக் கொண்டே அருகில் இருந்த வீடு ஒன்றில் நுழைந்தாள்.

---

**16)வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

அ) கலையரங்கத்தில் எனக்காக காத்திருக் கிறார். அவரை அழைத்து வாருங்கள்.

ஆ) நேற்று என்னை சந்தித்தார். அவர் என் நண்பர்.

விடை :

அ) கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக் கிறவரை அழைத்து வாருங்கள்.

ஆ) நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.

---

**17) எழுவாயைச் செழுமை செய்க.**

அ) கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

ஆ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

விடை :

அ) அழகிய குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

ஆ) நெறிப்படுத்தவும் மேம்படுத்தவும் உதவும் கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

---

18) ஏற்ற தலைப்புகளை இட்டு எழுதுக.

அ) கொளுத்தும் வெயில் சுட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது.

ஆ) புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு முகிழ்ந்தது. அச்செடியை

மொட்டு

வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

விடை :

அ) காற்றின் பாடல்

ஆ) மொட்டின் வருகை.

---

**19) இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

விடை :

சிலை - சீலை : சிலையை திரைச்சீரலையால் மறைத்திருந்தனர்.

மாலை : மலை : மலை மீது ஏறி மாலையில் விளையாடினேன்.

---

**20).** மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலை மீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன்; மனம் அமைதி எய்தும். - இத்தொடர்களிலுள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்று.

விடை :

| வினைமுற்று | தொழிற் பெயர் |
|---|---|
| அழைக்கும் | அழைத்தல் |
| ஏறுவேன் | ஏறுதல் |
| அமர்வேன் | அமர்தல் |

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | |
|---|---|
| பார்ப்பேன் | பார்த்தல் |
| எய்தும் | எய்துதல் |

---

21) அடிக்கோடிட்ட தொகைச் சொற்களை வகைப்படுத்துக.

அன்புச்செல்வன் திறன்பேசியில்தொடு திரையில் படித்துக் கொண்டிருந்தார்.

விடை :

- ➔ அன்புச்செல்வன் - இரு பெயரொட்டுப் பண்புத் தொகை
- ➔ தொடுதிரை - வினைத்தொகை.

---

22)ஐவகை நிலங்களின் அமைவிடங்களைக் கூறுக.

விடை :

- குறிஞ்சி- மலையும் மலை சார்ந்த இடமும்
- முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்
- மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்
- நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்
- பாலை -சுரமும் சுரம் சார்ந்த இடமும்.

www.Padasalai.Net

---

**23)பொறித்த பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

விடை :

பொறித்த = பொறி + த் + த் + அ

பொறி -பகுதி

த் - சந்தி

த் - இறந்தகால இடைநிலை

அ - பெயரெச்ச விகுதி

---

**24) எண்ணுப்பெயர்களைக் கண்டு தமிழ் எண்ணில் எழுதுக.**

| |
|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை<br>எறும்புந்தன் கையால் எண்சாண் |

விடை :

4 - ச (நாற்றிசை)

8-அ (எண்சாண்)

---

**25) கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.**

ஆடு, கல்

விடை :

ஆடு -மந்தை

கல் -குவியல்

---

www.Padasalai.Net

**26)**கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, கோறல் இத்தொழிற் பெயர்களை வகைப்படுத்துக.

விடை :

➔கட்டு : முதனிலைத் தொழிற்பெயர்
➔சொட்டு : முதனிலைத் தொழிற்பெயர்
➔வழிபாடு: விகுதி பெற்ற தொழிற்பெயர்
➔கேடு : முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
➔ கோறல் : விகுதி பெற்ற தொழிற்பெயர்.

---

**27)**"எனக்கு எழுதித் தருகிறாயா?" வினாவிற்கு எனக்கு யார் எழுதித் தருவார்கள்" என்று விடையளிப்பது எவ்வகை விளக்குக.

விடை :

எனக்கு எழுதித் தருகிறாயா? -அறியா வினா
எனக்கு யார் எழுதித் தருவார்கள்.
-வினா எதிர் வினாதல்

---

**28)**பாடாண் திணையை விளக்குக.

விடை :

★பாடாண் திணை = பாடு + ஆண் + திணை பாடப்படுகின்ற ஆண் மகனது கல்வி, வீரம், கொடை பற்றிய ஒழுகலாறுகளைக் கூறுவது. பாடாண் திணை ஆகும்.
★போரை மட்டும் சொல்லாது ஒருவரின் பிற மாண்புகளையும் குறிப்பிடுவதே பாடாண் திணையாகும்.

---

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**29) கிளர்ந்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

விடை :

கிளர்ந்த = கிளர் + த்(ந்) + த் + அ

கிளர் = பகுதி

த் = சந்தி, 'ந்' ஆனது விகாரம்

த் = இறந்தகால இடைநிலை

அ = பெயரெச்ச விகுதி.

---

**30)சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

மழை, விண், பொன், விலங்கு

விடை:

விண் மழை, பொன் விலங்கு.

---

**31)பொருத்தமான தொடர் அமைக்க.**

விடை :

★ இல்லாமல் இருக்கிறது - எங்கள் நாடு பஞ்சம் இல்லாமல் இருக்கிறது.

★ கொஞ்சம் அதிகம் - சங்க காலத்தில் மன்னர்களுக்கு வீரமும் கொடையும் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது.

---

**32)உம்மைத் தொகை எத்தனை அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும்? அவை யாவை?**

விடை :

உம்மைத் தொகை நான்கு அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும். அவை :

➔ எண்ணல்
➔ எடுத்தல்
➔ நீட்டல்
➔ முகத்தல்

---

**33)** இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின் விளக்கின் சொடுக்கி எந்த எப்பக்கம் இருக்கிறது? இதோ இருக்கிறது! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? - எவ்வகை வினா?

விடை :

அ)மின் விளக்கியின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? - அறியா வினா
ஆ) இதோ... இருக்கிறதே! - சுட்டு விடை
இ)சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா? இல்லையா? - ஐய வினா

---

**34)** குவிந்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

விடை :

குவிந்த = குவி + த் (ந்) + த் + அ
குவி = பகுதி
த் = சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் = இறந்தகால இடைநிலை
அ = பெயரெச்ச விகுதி

www.Padasalai.Net

---

**35)**<u>குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்ற வினாத் தொடர்கள் அமைக்க.</u>
குறளின்பம், காப்பியச் சுவை

விடை :

<u>குறளின்பம் :</u>

குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டோ?

<u>காப்பியச் சுவை</u> :

கம்பர் காலத்தில் காப்பியச் சுவை உச்சத்தில் இருந்ததோ?

---

**36)**உவமையைப் பயன்படுத்தி சொற்றொடர் அமைக்க. மழைமுகம் காணாப் பயிர் போல கண்ணினைக் காக்கும் இமை போல

விடை :

<u>மழைமுகம் காணாப் பயிர் போல :</u>

தாயை இழந்த கருணையன் மழைமுகம் காணாப் பயிர் போல வாடினான்.

<u>கண்ணினைக் காக்கும் இமை போல</u> :

இறைவன் அனுதினமும் நம்மை கண்ணினைக் காக்கும் இமை போலக் காத்துக் கொண்டு இருக்கிறார்.

---

<u>**37)**வழாநிலை எத்தனை வகைப்படும். அவை யாவை**?**</u>

<u>விடை :</u>

வழாநிலை ஏழு வகைப்படும். அவையாவன:

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

★ திணை வழாநிலை
★ பால் வழாநிலை
★ இட வழாநிலை
★ வினா வழாநிலை
★ மரபு வழாநிலை
★ கால வழாநிலை
★ விடை வழாநிலை

---

**38)அறியேன்-பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அறியேன் = அறி + ய் + ஆ + ஏன்
அறி = பகுதி
ய் = உடன் படுமெய் சந்தி
ஆ = எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது
ஏன் = தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

---

**39) வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

அ) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
ஆ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

விடை :

அ) நேற்று என்னை சந்தித்தவர் என் நண்பர்.
ஆ) ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

---

**40) பொருத்தமான தொடர் அமைக்க.**

வரப்போகிறேன், முன்னுக்குப் பின்

விடை :

வரப்போகிறேன் :

என் நண்பன் இன்னும் சிறிது நேரத்தில் வரப் போகிறேன் என்றான்.

முன்னுக்குப் பின் : முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவது நன்றன்று.

---

**41)**மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

மனக்கோட்டை, ஆறப்போடுதல்

விடை :

மனக்கோட்டை :

படிக்காமலே தேர்வில் வெற்றி பெற்று விடலாம் என்று சில மாணவர்கள் மனக்கோட்டை கட்டுகிறார்கள்.

ஆறப் போடுல் :

பிரச்சனைகளை பெரிதுபடுத்தாது ஆறப் போடுதல் அதிக தீய விளைவுகளைத் தரும்.

---

**42)**உவமையைப் பயன்படுத்தி சொற்றொடர் அமைக்க.

விடை :

தாமரை இலை நீர் போல :

என் நண்பன் தாமரை இலைநீர் போல பட்டும் படாமலும் பழகுவான்.

சிலை மேல் எழுத்துபோல :

www.Padasalai.Net

சிறு வயதில் கற்கும் அறக்கருத்துகள் சிலை மேல் எழுத்து போல மனதிலே நிலைத்து நின்று நம் வாழ்வை வழிநடத்தும்.

---

**43)"சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்கமாட்டான்" என்ற இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார். இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.**

விடை :

உடுப்பதூஉம் : இன்னிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையான இடத்தும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடையாகும்.

---

**44)தணிந்தது - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

தணிந்தது = தணி + த் (ந்) + த் + அ + து

தணி = பகுதி

த் = சந்தி 'ந்' ஆனது விகாரம்

த் = இறந்தகால இடைநிலை

அ = சாரியை

து = படர்க்கை வினைமுற்று விகுதி

---

**45)உவமைகளை சொற்றொடரில் அமைக்க.**

இலவு காத்த கிளி போல

விடை :

www.Padasalai.Net

இந்திய மக்கள் ஊழலற்ற ஆட்சிக்காக இலவுக் காத்தக் கிளி போல காத்திருக்கிறார்கள்.

---

46)தொடரில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.

| |
|---|
| உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருக்கக் காய் புசித்தலைப் போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னற்படுகின்றனர். |

விடை :

புவியில் வாழும் மானுடர்கள் சிலர் பழமிருக்கக் காய் உண்பதைப் போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி துன்பப்படுகின்றனர்.

---

**47)** மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைக்க.

ஆயிரங் காலத்துப்' பயிர்

விடை :

திருமணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர்.

---

**48)** வண்ணச் சொற்களின் தொடர் வகைகளை எழுதுக.

| |
|---|
| பழகப் பழகப் பாலும் புளிக்கும் |

www.Padasalai.Net

| |
|---|
| வடித்த கஞ்சியில் சீலையை அலசினேன் |

விடை :

★பழகப் பழக : அடுக்குத் தொடர்

★வடித்த கஞ்சி : பெயரெச்சத் தொடர்

---

**49)**மலைந்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

விடை :

மலைந்த = மலை + த் (ந்) + த் + அ

மலை - பகுதி

த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்

த் - இறந்த கால இடைநிலை

உ - வினையெச்ச விகுதி

---

**50)**எழுவாயைச் செம்மை செய்க.

கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

விடை :

★நெறிப்படுத்தவும் மேம்படுத்தவும் உதவும் கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

★படைப்புத்திறன் மிக்க குழந்தைகள் தனித் தனியே எழுதித்தர வேண்டும்.

---

**51)** உவமையைப் பயன்படுத்தி சொற்றொடர் உருவாக்குக.

www.Padasalai.Net

| |
|---|
| தாமரை இலை நீர் போல,<br>சிலை மேல் எழுத்து போல |

விடை :

★ என் நண்பன் தாமரை இலை நீர் போல பட்டும் படாமலும் பழகுவான்.

★ சிறுவயதில் கற்கும் அறக்கருத்துகள் சிலைமேல் எழுத்து போல மனதிலே நிலைத்து நின்று நம் வாழ்வை வழிநடத்தும்.

---

**52)விடை வகைகளைக் கண்டறிக.**

| |
|---|
| அ)கடைத்தெரு எங்குள்ளது? என்ற வினாவிற்கு, 'வலப்பக்கத்தில் உள்ளது' எனக் கூறல்.<br>ஆ) நீவிளையாடவில்லையா? என்ற வினாவிற்கு கால்' வலிக்கும் என்று உரைப்பது. |

விடை :

அ) சுட்டு விடை

ஆ) உற்றது உரைத்தல் விடை.

---

**53) பதிந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

விடை :

பதிந்து = பதி + த் (ந்) + த் + உ

பதி =பகுதி

த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



த் -இறந்த கால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

---

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com